0038

**இலங்கைதிறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேடதேவைகள் கல்வியில் கல்விமாணி சிறப்புநிகழ்ச்சித்திட்டம் - 2025/2026**

**இறுதிப்பரீட்சை- 2026**

**மட்டம் - 06**

**SNU6230– விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறை முகாமைத்துவம்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:-28.06.2026** **நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30**

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

1. விசேடக் கல்வித் தேவைகள் சார் கல்விச் சூழலில் "வகுப்பறை முகாமைத்துவத்தின்" முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக.

2. ஒரு விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறைச் சூழலில் வகுப்பறை முகாமைத்துவத்தினை திட்டமிடும் போது ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டிய **ஐந்து (05)** அம்சங்களைக் குறிப்பிடுக.

3. விசேடக் கல்வித் தேவைகள் சார் சூழலில் வகுப்றை ஒழுங்கமைப்பில் பங்களிப்புச் செய்யும் **ஐந்து (05)** காரணிகளை எழுதுக.

4. விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறையில் மாணவர்களின் கவனத்தை பாடத்தின்பால் வைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் ஒருவர் பிரயோகிக்கக்கூடிய நுட்பங்கள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

5. விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறையினை வருடத்தின் ஆரம்பத்தில் தயார்ப்படுத்துவதற்காக பெற்றோரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய **ஐந்து (05)** உத்திகளைக் குறிப்பிடுக.

6. விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறையில் மாணவர்களுடைய நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு ஆசிரியரால் பயன்படுத்தக்கூடிய **ஐந்து (05)** ஒழுங்கு விதிகளைக் குறிப்பிடுக.

7. விசேடக் கல்வித் தேவைகள் சார் வகுப்பறை ஒன்றில் மாணவர்களின் அழித்தல்சார் "அண்மித்த கட்டுப்பாடு" தொடர்பான உத்திகள் உதவும் என்பதைப் பொருத்தமான உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விள்க்குக.

8. விசேடக் கல்வித் தேவைகள்சார் வகுப்பறை ஒன்றில் ஆசிரியர் ஒருவரால் அவதானிக்கக்கூடிய நடத்தைசார் ஒழுங்கீனங்களின் வகைகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

**(08 x 05 = 40புள்ளிகள்)**

## பகுதி–II

9. **"ஆசியரிடமிருந்து கிடைக்கும் நேர்நிலையான மனவெழுச்சிசார் ஒத்துழைப்பு விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களுடைய கற்றலை மாற்றியமைப்பதுடன் அவர்கள் தங்களது முழுமையான ஆற்றலை அடைந்து கொள்வதற்கும் உதவும்."**

    **அ.** மனவெழுச்சிசார் நடத்தைகள் என்பதால் நீங்கள் கருதுவது யாது? **(04 புள்ளிகள்)**

    **ஆ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் நேரான மனவெழுச்சிசார் நடத்தைகளை விருத்தி செய்வதற்காக ஆசிரியர் ஒருவரால் பிரயோகிக்கக்கூடிய நுட்பம் **ஒன்றினைச் (01)** சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

    **இ.** மனவெழுச்சிசார் நடத்தை ஒழுங்கீனங்கள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு, விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் அத்தகைய நடத்தை ஒழுங்கீனங்களை களைவதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய உத்திகளைச் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

10. **"வழிகாட்டல், பொறுமை மற்றும் நேரான ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக, விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களின் சுய ஒழுக்கத்தையும் ஆரோக்கியமான சமூக மற்றும் மனவெழுச்சிசார் நடத்தைகளையும் விருத்தி செய்யலாம்."**

    **அ.** சுய முகாமைத்துவத் திறன்கள் எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

    **ஆ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் அவதானிக்கக்கூடிய பொருத்தப்பாடற்ற நடத்தைகள் **மூன்றினைக் (03)** குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

    **இ.** மேலே குறிப்பிட்ட (பகுதி –II இல்) விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களின் பொருத்தப்பாடற்ற நடத்தைகளை இல்லாமல் செய்வதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு சுய – முகாமைத்துவத்திறன்கள் எவ்வாறு உதவும் என்பதைச் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

11. **"விளங்கிக் கொள்ளல், கூட்டுறவு மற்றும் உள்ளடங்கல் கற்பித்தல் நடைமுறைகள் போன்றவற்றின் சமூகத் தொடர்புகள் மற்றும் ஒன்றாக இணைந்து வெற்றி பெறுதல் என்பவற்றைக் கட்டியெழுப்ப முடியும்."**

    **அ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் தொடர்புறவுகளைக் கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

    **ஆ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் தொடர்புறவுகளை விருத்தி செய்யும் போது ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் **மூன்று (03)** சவால்களைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

    **இ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் தொடர்புறவுகளை விருத்தி செய்யும் போது எதிர்நோக்கப்படும் சவால்களாக மேலே (பகுதி –II இல்) குறிப்பிட்டவற்றை இழிவளவாக்குவதற்கு அல்லது முகங்கொடுப்பதற்கு பொருத்தமான உத்திகளைப் பரிந்துரைக்குக. **(10 புள்ளிகள்)**

12. **"அக்கறை செலுத்தும் ஒரு வகுப்பறை ஆசிரியர் வழிகாட்டல், ஒத்துழைத்தல் மற்றும் உற்சாகமூட்டுதல் ஊடாக ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் நேரான சமூக மற்றும் மனவெழுச்சியை விருத்தி செய்வதில் ஒரு முக்கியமான வகிபங்கினை வகிக்கின்றார்."**

**அ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் சமூகத்திறன்களை விருத்தி செய்ய வேண்டியதற்கான ஏதேனும் **இரண்டு (02)** முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ஆ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களிடத்தில் சமூகத்திறன்களை மேம்படுத்துவதற்கான செயற்பாடு ஒன்றினை படிமுறைகளுக்கு அமைவாக எழுதுக. **(06புள்ளிகள்)**

**இ.** விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட வகுப்பறையின் முகாமையாளர் என்ற வகையில் நீங்கள் வகித்த ஏதேனும் **நான்கு (04)** வகிபாங்களை விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

13. **"ஒரு உடன்பாடான உள்ளடங்கல் வகுப்பறை சூழலானது சகல மாணவர்களதும் அவர்களது வேறுபாடுகளை கருத்திற் கொள்ளாமல் மதிப்பு, பங்குபற்றல் மற்றும் சமமான கற்றலுக்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுப்பதனை நோக்கி உற்சாகப்படுத்தும்."**

**அ.** உள்ளடங்கல் வகுப்பறையுடன் தொடர்புபடுத்தி உடன்பாடான வகுப்பறைச் சூழல் என்பதன் பொருளைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ஆ.** உடன்பாடான உள்ளடங்கல் சூழலை கட்டியெழுப்பும் போது ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் **மூன்று (03)** சவால்களை விபரிக்குக. **(06புள்ளிகள்)**

**இ.** மேலே (பகுதி –II இல்) குறிப்பிட்ட சவால்களை இழிவளவாக்குவதற்கு அல்லது எதிர்கொள்வதற்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்வீர்கள் என **மூன்று (03)** பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. **(10 புள்ளிகள்)**

14. **"விளைதிறன்மிக்க வகுப்பறை முகாமைத்துவம் பாதுகாப்பானதும், ஒழுங்கமைக்கப்பட்டதும், உள்ளடங்கல், கற்பித்தல் நடைமுறைகள் ஆகியவற்றைக் கொண்ட சூழலானது சகல மாணவர்களும் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கும்."**

**அ.** விளைதிறன்மிக்க வகுப்பறை முகாமைத்துவம் எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ஆ.** உள்ளடங்கல் சூழலில் விளைதிறன்மிக்க வகுப்பறைச் சூழலை கட்டியெழுப்பும போது கவனத்தில் கொளள் வேண்டிய **மூன்று (03)** காரணிகளைக் குறிப்பிடுக. **(06புள்ளிகள்)**

**இ.** உள்ளடங்கல் சூழலொன்றில் விளைதிறன்மிக்க வகுப்பறை முகாமைத்தவத்தினை பேணுவதனூடாக ஆசிரியர் ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய **நான்கு (04)** நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமைபெற்றது* -